




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பாக, உலக நுகர்வோர் உரிமை தினம் நிகழ்ச்சி நாகர்கோவில், பெண்கள் கிறிஸ்துவ கல்லூரியில் இன்று (15.03.2017) நடைபெற்றது.

செ.வெ.எண்: 192/2017 நாள்: 15.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், உலக நுகர்வோர் உரிமை தினம் நிகழ்ச்சி இன்று (15.03.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பாக, உலக நுகர்வோர் உரிமை தினம் நிகழ்ச்சி நாகர்கோவில், பெண்கள் கிறிஸ்துவ கல்லூரியில் இன்று (15.03.2017) நடைபெற்றது.

இவ்விழாவிற்கு தலைமையேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:-

நமது மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் உலக நுகர்வோர் உரிமை தினம் நிகழ்ச்சி சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கன்னியாகுமரி ஜில்லா நுகர்வோர் பாதுகாப்பு மையம் மற்றும் குடிமக்கள் நுகர்வோர் மன்றம் இணைந்து இன்று உலக நுகர்வோர் உரிமை தினம் கொண்டாடப்பட்டது.

நாம் ஒவ்வொருவர்களும் நுகர்வோர்தான்.நமக்கென்று உரிமைகள் உண்டு. நுகர்வோர்களாகிய நீங்கள், எந்த ஒரு பொருட்கள் வாங்கினாலும், அந்த பொருள்கள் மீதான ரசீதுகளை தவறாமல் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும், பொருள்கள் ஏதேனும் வாங்கும்போது, காலாவதியாகும் தேதிகளை நன்றாக பார்க்க வேண்டும். பின்னர், அந்த பொருளின் தரம் மற்றும் பாதுகாப்பான பொருளா என்பதை பார்க்க வேண்டும்.

மேலும், இதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அதனை உடனடியாக மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்களிடம் தெரிவிக்க வேண்டும் என தெரிவித்தார்.

பின்னர், உலக நுகர்வோர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற 4 மாணவ, மாணவியர்களுக்கும், கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்ற 3 மாணவ, மாணவியர்களுக்கும், திறன் போட்டியில் வெற்றி பெற்ற 3 மாணவ, மாணவியர்கள் என மொத்தம் 10 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களும், நினைவுப்பரிசுகளும் வழங்கினார்.

மேலும், 2016-17-ம் ஆண்டு, நுகர்வோர் மன்றமாக இருந்து சிறப்பாக செயல்பட்ட நாகர்கோவில், பெண்கள் கிறிஸ்துவ கல்லூரிக்கு முதல் பரிசாக ரூ. 1,500/-க்கான காசோலையினையும், கன்னியாகுமரி மனோன்மணியம் சுந்தரனார் உறுப்புக் கல்லூரிக்கு இரண்டாம் பரிசாக ரூ. 1,000/-க்கான காசோலையினையும், நாகர்கோவில் பயோனியர் குமாரசுவாமி கல்லூரிக்கு மூன்றாம் பரிசாக ரூ.500/-க்கான காசோலையினையும் வழங்கினார்.

நிகழ்ச்சியில், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திருமதி. டி. சின்னம்மாள், பெண்கள் கிறிஸ்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் நிர்மலா மனுவேல், ஒருங்கிணைப்பாளர் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் மற்றும் கன்னியாகுமரி ஜில்லா நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் தலைவருமான திரு. எம். தாமஸ், மாவட்ட நியமன அலுவலர் (உணவு பாதுகாப்பு துறை) மரு. ஆர்.கருணாகரன், துணை பொது மேலாளர் (பிஎஸ்.என்.எல்) திரு. கே.சந்திரன், கன்னியாகுமரி ஜில்லா நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் பொதுச்செயலாளர் திரு. டி. சிதம்பரம்பிள்ளை உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் கல்லூரி மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.